கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்
සමූපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NOTHERN PROVINCE

My No: **NP/15/MA/GEN/08** Your No:-

**2007.09.28**

சுற்றறிக்கை இல : **06/2007**

சகல ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களினதும்,
2ம்படி கூட்டுறவுச் சங்கங்களினதும்,
ப.தெ.வ.அ.கூட்டுறவுச் சங்கங்களினதும் தலைவர்களுக்கும்.

**ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களினதும், 2ம்படி கூட்டுறவுச் சங்கங்களினதும், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களினதும், இயக்குனர் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான படிகளும், பிரயாணச் செலவுகளும், பொதுச்சபைக் கூட்ட பேராளர் படிகளும்.**

---

ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களினதும், 2ம்படி கூட்டுறவுச் சங்கங்களினதும், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களினதும், இயக்குனர் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் இயக்குனர்களின் படிகளும், பொதுச்சபைக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் பேராளர்களுக்கான படிகளும். பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

1. இயக்குனர் படி :

1.1 இயக்குனர் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக இயக்குனர்களுக்கு உணவுப்படிகள் உட்பட மாதமொன்றிற்கு உச்ச எல்லை ரூபா.900/-க்கு உட்பட ஒரு கூட்டத்திற்கு ரூபா.300/- வீதம் பொதுவான படி ஒன்றினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

1.2 இலாபத்தில் இயங்கும் மேற்குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குனர்சபைக் கூட்டங்களுக்கு ரூபா.75/- வீதமான படியொன்றினை மாதமொன்றிற்கு உச்ச எல்லையாக ரூபா.225/-க்கு உட்படப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்விலாபத்தினைக் கணிக்கும் பொழுது கிராமிய வங்கிப்பிரிவினை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் ஏனைய பிரிவுகளின் மொத்த மேலதிகம் / குறைவுகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். மேலே 1.1ல் காட்டப்பட்ட பொதுவான படியினைச் செலுத்துவதுடன் மாத இறுதியில் படிவம் 28ன் அடிப்படையில் கணிப்பீடு செய்து கிராமிய வங்கிப் பிரிவு தவிர்ந்த மொத்த மேலதிகத்தினைப் பற்றி கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும்.

**Kanniya Road, Varothaya Nagar, Trincomalee.**

**Gen Office:** **0602264645** **CCD & RCS: -** **0602264646** **E – Mail – npcoop@slt.lk**

1.3 இப்படியினைப் பெற்றுக்கொள்வதற்கு குறைந்தபட்சம் இரண்டுமணித்தியாலங்களுக்கு குறையாமல் கூட்டத்தில் கலந்து கொண்டிருத்தல் வேண்டும்.

1.4 இயக்குனர்சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அவரால் பொதுவாகனங்களில் பிரயாணம் செய்வதற்கு செலவிட்ட தொகையினை பிரயாணச் செலவாகப் பெற்றுக் கொள்ளலாம்.. சொந்த வாகனத்தை வைத்திருக்கும் இயக்குனர் ஒருவருக்கு ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா.5/- வீதம் பெற்றுக் கொள்ளலாம். சொந்த வாகனம் என்பதன் கருத்து வாகனத்தின் அனுமதிப்பத்திரமும், பதிவும் அவரது பெயரிலேயே இருப்பதற்கான அத்தாட்சி சமர்ப்பிக்கப்படும் பட்சத்திலேயே இக்கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும்.

1.5 இயக்குனர் கூட்டப்படியினை இயக்குனர் என்ற அடிப்படயில் தலைவரும் பெற்றுக் கொள்ளலாம்.

2. பொதுச்சபை பேராளர் படி :

2.1 மேற்கூறப்பட்ட சங்கங்களின் பொதுச்சபைக் கூட்டங்களில் பங்குபற்றும் பேராளர்கள் ரூபா.200/- படி ஒன்றினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**2.2 மேற்குறிப்பிடப்பட்ட திருத்தப்பட்ட படிகளின் ஏற்பாடுகளை உள்ளடக்கிய நடைமுறைவிதிகள் பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே இக்கொடுப்பனவுகள் செல்லுபடியாகும்.**

இக்கொடுப்பனவுகள் யாவும் 2007.11.01ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

இக்கொடுப்பனவுகள் தொடர்பான 1999.12.28ந் திகதிய 07/99 சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

**ஆ.சுப்பிரமணியசர்மா,**
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்.(வ.மா)

பிரதி : 1. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள்.
2. அதிபர், மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம்.

-கிம.